[2006 ஆகஸ்ட் 24

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. து. அமரமூர்த்தி.

திரு. து. அமரமூர்த்தி: மாண்புமிகு முதல்வர் அவர்கள் நிச்சயமாகப் பரிசீலிக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்காக எங்களது மாவட்டத்தின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 83, மாண்புமிகு உறுப்பினர் திரு. வீர. இளவரசன், மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

83—

சார்பு நீதிமன்றம்

***1001—திரு. வீர. இளவரசன்:**

மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருமங்கலம் தொகுதி, திருமங்கலத்தில் சார்பு நீதிமன்றம் அமைத்திட அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருமங்கலத்தில் சார்பு நீதிமன்றம் அமைக்கும் செயற்குறிப்பு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. வீர. இளவரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமங்கலத்தில் குற்றவியல் நீதிமன்றமும், மாவட்ட உரிமையியல் நீதிமன்றமும் இருந்து வருகின்றன. 1969 ஆம் ஆண்டிலேயே திருமங்கலத்தில் இருக்கின்ற மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வெள்ளி விழாக் கொண்டாடிய சிறப்பு உடையது. அங்கே ஏறத்தாழ 110 வழக்கறிஞர்கள், வழக்கறிஞர் தொழிலில் ஈடுபட்டு வருகிறார்கள். அது தவிர, திருமங்கலம் நீதிமன்றத்தைப் பொறுத்தமட்டிலும், திருமங்கலம் வட்டம், பேரையூர் வட்டம், வாடிப்பட்டி வட்டத்தின் ஒரு பகுதி, அதேபோல மதுரை தெற்கு வட்டத்தின் ஒரு பகுதி என்று ஒரு பரந்து விரிந்த அதிகாரப் பரப்பளவைக் கொண்டது, திருமங்கலம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம். அதுமட்டுமல்லாமல், அங்கே மதுரை மாவட்டத்தையும், விருதுநகர் மாவட்டத்தையும் இணைக்கும் பாலமாக திருமங்கலம் இருந்து வருகிறது.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2006 ஆகஸ்ட் 24]

ஆயிரத்திற்கும் மேற்பட்ட வழக்குகள் மேல்முறையீட்டிற்காக மதுரைக்குச் செல்ல வேண்டிய ஒரு சூழ்நிலை இருந்து வருகிறது. எனவே, இதையெல்லாம் கருத்தில்கொண்டு, திருமங்கலத்தில் இருக்கின்ற வழக்கறிஞர்களுடைய நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றுகின்ற வகையிலும், அதேபோல பொதுமக்களின் வசதியை முன்னிட்டும் திருமங்கலம் நகரில் ஒரு சார்பு நீதிமன்றம் அமைப்பதற்கு இந்த அரசு முயற்சிகளை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே திருமங்கலத்திலே ஆயிரம் வழக்குகள் நிலுவையிலே இருப்பதாகத் தெரிவித்தார்கள். உயர் நீதிமன்றம் அதிகமான வழக்குகள் நிலுவையிலே இருக்கக்கூடிய நிலையிலேதான் புதிய சார்பு நீதிமன்றங்கள் அமைப்பதற்குரிய கருத்துருவை அரசுக்கு அனுப்புகின்றது. உயர் நீதிமன்றத்திலிருந்து இதுவரை அரசிற்குத் திருமங்கலத்திலே சார்பு நீதிமன்றம் அமைக்க வேண்டுமென்ற கருத்துரு வரவில்லை. அப்படி வந்தவுடன் நிதிநிலைக்கேற்ப அரசு அதைப் பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. உதயசூரியன்.

திரு. தா. உதயசூரியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக உருவாக்கப்பட்ட வட்டங்களில், 1996-2001 ஆம் ஆண்டுகளில், கழக ஆட்சியில், குற்றவியல் நீதிமன்றம் உருவாக்கப்பட்டது. அதைப்போல, புதிதாக உருவாக்கப்பட்ட வட்டங்களில் சார்பு நீதிமன்றம் உருவாக்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9–50

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல, ஒரு வட்டத்திற்கு ஒரு சார்பு நீதிமன்றம் என்பது நிச்சயமாக அரசால் இயலாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ராஜன்.

திரு. அ. ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகர்கோயிலில் உள்ள நீதிமன்ற வளாகத்தில் 3 குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் உள்ளன. இதில் நம்பர்-1 குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தை நாகர்கோயிலிலிருந்து மாற்றி கன்னியாகுமரிக்குக் கொண்டு செல்ல, கடந்த அ.தி.மு.க. சர்க்கார் ஆணை பிறப்பித்தது. பொதுவாக, Government Policy என்பது ஒரு தாலுகாவிற்கு ஒரு நீதிமன்றம் இருக்க வேண்டும் என்பதாகும் என்று அறிகிறேன். நாகர்கோயிலும், கன்னியாகுமரியும் ஒரே அகஸ்தீஸ்வரம் தாலுகா பகுதியைச் சேர்ந்ததாகும். எனவே, அரசு உத்தேசித்துள்ள கன்னியாகுமரிக்கு மாற்றும் எண்ணத்தை மாற்றி, தொடர்ந்து மாவட்டத் தலைநகரமான நாகர்கோயிலிலேயே அந்தக் Court-ஐ இயக்கிட அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிக் கருத்துரு அரசிடம் இருந்தால், மாற்றாமல் இருந்தால் நிச்சயமாக இந்த அரசு மாற்றும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 84, மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி, மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

84—

ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம்

***2178—செல்வி கே. பாலபாரதி:**

மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திண்டுக்கல் நகரிலுள்ள மாவட்ட ஒருங்கிணைந்த நீதிமன்றங்களின் கட்டடத்தை வேறு இடத்திற்கு மாற்றும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திண்டுக்கல் நகரிலுள்ள மாவட்ட ஒருங்கிணைந்த நீதிமன்றங்களின் கட்டடத்தை வேறு இடத்திற்கு மாற்றும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.